# அவலங்கள் நீங்கவும், அபிலாஷைகளை வென்றெடுக்கவும் ….

**அன்பார்ந்த தமிழ் மக்களே!**

இன்னும் தொடரும் இந்தக் கொடூரப் போரின் விளைவாக வன்னியில் மக்கள், காயங்களுக்கும் உயிரிழப்புக்களுக்கும் உள்ளாவதோடு, தாம் விரும்பிய இடங்களுக்குச் செல்லமுடியாது, பதுங்கு குழிகளுக்குள் வாழ நிர்ப்பந்திக்கப்படுவதுடன், பிள்ளைகளைப் பறிகொடுத்தும், குடும்பங்களைப் பிரிந்தும், கூடாரங்களுக்குள் வாழும் அவல நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஏப்ரல் மாத இறுதியில் பெறப்பட்ட புள்ளிவிபரங்களின் பிரகாரம், இவ்வாறு இடம்பெயர்ந்த ஒரு இலட்சத்து 82 ஆயிரத்திற்கும் அதிகமானோர், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய மாவட்டங்களில், தற்காலிக தங்குமிடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில், யாழ் மாவட்டத்தில் 11ஆயிரத்து 079 பேரும், வவுனியா மன்னார் மாவட்டங்களில் ஒரு இலட்சத்து 67 ஆயிரத்து 330 பேரும், திருகோணமலை மாவட்டத்தில் 4000 பேரும் தங்கவைக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம், வவுனியா அரசாங்க அதிபர்கள் உத்தியோக பூர்வமாக அறிவித்திருந்தனர்.

இந்த மக்கள் தங்குவதற்கான ஏற்பாடுகளையும், உணவு, குடிநீர், மருத்துவம் மற்றும் சுகாதார வசதிகள் போன்ற அத்தியாவசிய தேவைகளை அரசாங்கமும் அரசுசார்பற்ற நிறுவனங்கள், சமய நிறுவனங்கள், கட்சிகள், பொது அமைப்புக்களும் வழங்கி வருகின்ற போதும், பற்றாக்குறைகளுடனும் கஷ்டங்களுடனுமே அவர்களது வாழ்க்கை களிகின்றது. அத்துடன், குடும்ப உறுப்பினர்கள், நெருங்கிய உறவினர்களைப் பிரிந்த கவலையும் அவர்களை வாட்டுகிறது.

இவர்களுக்கு, வன்னி மரணப் பொறியிலிருந்து உயிர் தப்பிவிட்டோம் என்ற நிம்மதியும், உணவுக்கும் மற்றும் அத்தியாவசிய தேவைகளுக்கும் பட்ட கஷ்டங்கள் விலகியிருக்கின்றன, ஒப்பீட்டளவில் சிறப்பாயுள்ளன என்ற ஆறுதலும் ஏற்பட்டிருந்தாலும், அவர்களது ஏக்கமும் எதிர்பார்ப்பும் தாம் முகாம்களுக்குள் அடைபட்டிருக்கும் நிலை மாறி இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவது எப்போது என்பதுதான்.

இந்த மக்களின் அவலங்கள் அரசியல் ஆதாயத்திற்குப் பயன்படுத்தப்படக் கூடாது. இலங்கை அரசு புலிகள் மீது தொடுத்திருக்கும் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவதற்கும், உலக நாடுகள் புலிகள் மீது விதித்துள்ள தடையை விலக்கி புலிகளுக்கு அங்கீகாரம் தேடும் அரசியல் காய் நகர்த்தல்களுக்கு தமிழ் மக்கள் போடுதடிகளாக பயன்படுத்தப்படுகின்றனர். மக்களை மதிக்காமல், உலகத்தை மதிக்காமல் இந்த இழிநிலையை ஏற்படுத்திய புலிகளின் தலைமைத்துவத்தையும், அதற்கு உறுதுணையாகச் செயற்பட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரையும் (TNA) காப்பதற்கு தமிழ் மக்களைப் பணயமாக வைத்து முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் கண்டிக்கப்பட வேண்டியவையாகும்.

தமது சுயலாபங்களுக்காக தமிழ் மக்களையும், தமிழ் மக்களின் அரசியலையும் முட்டுச் சந்தில் கொண்டுவந்து நிறுத்தியிருக்கும் புலிகளும் TNA யினரும், தாம் இழைத்த தவறுகளிலிருந்து தப்புவதற்கு இப்பொழுது மக்களின் அவலங்களைத் துருப்புச் சீட்டாகப் பாவிக்க முனைந்துள்ள முயற்சிகள் மிகவும் கீழ்மையானவையாகும்.

இடம்பெயர்ந்த மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும், தேவைகளை பூர்த்தி செய்வதற்குமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது உடனடி அவசியமாக உள்ள அதேவேளை, அவர்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவதற்கான நடவடிக்கைகளும் விரைந்து முன்னெடுக்கப்பட வேண்டும். இன்னமும் தப்ப முடியாமல், புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்கள் தன்னிச்சையாக வெளியேறுவதற்கு வழிவகைகள் செய்யப்பட வேண்டும்.

ஏற்கனவே 1990 ல் வலிகாமம் வடக்கு பாதுகாப்பு வலயப் பகுதிகளிலிருந்தும், 2000 ஆம் ஆண்டு தென்மராட்சியிலிருந்தும் இடம்பெயர்ந்த மக்களும் இன்னும் சொந்த இடங்களுக்கு திரும்பாமல் முகாம்களிலும், உறவினர்கள், நண்பர்களின் வீடுகளிலும் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

அதுமாத்திரமல்ல பொதுவாக எமது மக்கள் பொருட்களின் விலை ஏற்றத்தாலும், தொழில்வாய்ப்புகள் இன்மையாலும், போக்குவரத்து நெருக்கடிகளாலும், சட்டம் ஒழுங்குக்கு புறம்பான செயற்பாடுகள், அச்சுறுத்தல்கள், படுகொலைகள், காணாமறபோதல்கள், கடத்தல்கள், கப்பம் போன்ற வன்முறை சம்பவங்களாலும் இயல்புவாழ்வை பறிகொடுத்தவர்களாக உள்ளார்கள். இத்தகைய பேரவலங்கள் முடிவுக்கு வர வேண்டும். இடம்பெயர்ந்து முகாம்களில் உள்ள மக்களுக்கு உதவி, அவர்களது அன்றாட தேவைகளின் பூர்த்தி, அவர்கள் தம் சொந்த இடங்களுக்குத் திரும்புவது ஆகியவை இன்று மிகமிக அவசியமானவைதானெனினும், அத்துடன் தமிழ்மக்களின் அவலங்கள் முடிவுக்கு வந்துவிடாது.

மக்கள் இழந்திருக்கும் ஜனநாயக சூழல் மீளக் கட்டியெழுப்பப்படுவதுடன், இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவதற்கான வழிவகைகள் செய்யப்படுவதன் மூலமே தமிழ் மக்களின் இடர்களையும், அவலங்களையும் படிப்படியாக முடிவுக்கு கொண்டுவர முடியும்.

இயல்புவாழ்வை மீளக் கட்டியெழுப்புவது என்பது பாதுகாப்புடன் தொடர்புபட்ட விடயமாகவும் காணப்படுகின்றது: சாதாரண பயணிகள் போல நடமாடி நடாத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள் குண்டுத் தாக்குதல்கள் வீதிப்போக்குவரத்திற்கு இடையூறாக சோதனைசாவடிகள், வீதித்தடைகள் அதிகரிக்கக் காரணமாக அமைந்ததும், மீன்பிடித் தொழிலுக்கு, மீனவர்களோடு மீனவர்களாக வந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தடையாக இருந்து வந்ததையும் அனைவரும் அறிவர்.- இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர்வதற்கும் பாதுகாப்பு காரணங்களே முட்டுக்கட்டையாக உள்ளன.

எனவே, மீண்டும் ‘கெரில்லா போராட்டம்’ என்ற பேரில் ஜனநாயக மறுப்பும், வன்முறைகளும் முனைப்புபெறுமானால் இராணுவ மயமாக்கல் தொடர்வதற்கும், கெடுபிடிகளின் நீட்சிக்குமே வழிவகுக்கும்; ஏற்கனவே நாசப்படுத்தப்பட்ட வளங்களும், தொழில்துறைகளும் விருத்தி செய்யப்பட முடியாது போகும்; பல தலைமுறைகளாகத் தொடரும் அழிவுகள், இழப்புக்கள், துயரங்கள் ஆகியவற்றுக்குள் எதிர்கால சந்ததிகளையும் தள்ளிவிடுவதாகவே முடியும். எனவே, கடந்த காலத் தவறுகளையும், சமகாலச் சூழலையும், யதார்த்த நிலைமைகளையும் கவனத்திலெடுத்து மக்களின் இயல்புவாழ்வுக்கு வழியேற்படுத்துவது இன்றியமையாத முழுமுதற் கடமையாகும்.

தமிழ்பேசும் மக்கள், அரசியல்ரீதியாக பலவீனமான நிலைக்கு இட்டுச்செல்லப்பட்டிருக்கின்றோம் என்பதை புரிந்துகொண்டு, இந்நிலையிலிருந்து தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை எய்துவதற்கான வழிமுறைகள் பற்றி ஆராய்வது அவசியம். வெறுமனே அபிவிருத்தி என்பதாகவோ, சில சலுகைகளை பெற்றுக்கொள்வதாகவோ மக்களின் அபிலாஷைகளை குறுக்கி விடக் கூடாது. அதேசமயம் மக்களின் தேவைகளை, அன்றாட பிரச்சினைகளைப் புறக்கணித்து, உரிமைக்கான போராட்டம் என்ற பேரில் யதார்த்தத்திற்கு ஒவ்வாத பிரபலம் தேடும் எதிர்ப்பு அரசியலையும் தேர்ந்தெடுக்க முடியாது.- புலிகளினதும், தமிழ் தேசிய கூட்டமைப்பினரதும் (TNA) இந்த அணுகுமுறையின் விளைவுகளையும் பாதகங்களையுமே தமிழ் மக்கள் இன்று அனுபவித்து வருகின்றனர்.

அரசியல், சமூக, பொருளாதார வலுவுள்ளவர்களாக மக்கள் மாறவேண்டும்; மக்களின் குரலுக்கு மக்களின் பிரதிநிதிகள் என்று கூறுகின்றவர்கள் செவிசாய்க்கின்ற நிலை உருவாக வேண்டும். அவ்வாறான அரசியல் முன்னெடுப்புக்களே சுபிட்சமான எதிர்காலத்திற்கு, மக்களின் விடிவுக்கு வழிவகுக்கும். இத்தகைய நிலையைத் தோற்றுவிப்பதில் மக்களின் பங்கு பிரதானமானது. - இது குறித்த விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்துவதும், அணிதிரட்டுவதும் உண்மையான சமூக அக்கறையுள்ள அமைப்புக்கள், ஊடகங்கள், அரசியல் சக்திகளின் தலையாய பணியாகும்.

**ஜனநாயக சமூகத்தையும், கௌரவமான வாழ்க்கையையும் நோக்கி**

**எமது சக்திகளை ஐக்கியப்படுத்துவோம்!**

---

**பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எவ்)**

13, மே 2009